**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

O.S.No.134/2010 **நாள்– 30.08.2024**

பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாகிய பி.வா.சா.2. ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீதாராமன் | தாலுகா | |
| த–பெ | | தொழில் | |
| கிராமம் | | வயது | |

**<u>முதல் விசாரணை</u>**

நான் பி.ரெட்டியபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ராணுவத்தில் வேலை பார்த்து ஓய்வுபெற்றுவிட்டேன். என் தகப்பனார் பெயர் டி .வி.சஞ்சீவிநாயக்கர். அவர் தற்போது உயிருடன் இல்லை. என் தகப்பனாரின் அப்பா பெயர் வெங்கடசாமிநாயக்கர். நான் பழைய எஸ்எஸ்எல்சி 11 ம் வகுப்பு படித்துள்ளேன். என் அப்பா சஞ்சீவிநாயக்கரின் கையொப்பம் எனக்கு தெரியும் . என் அப்பாவின் கையொப்பத்தினை பார்த்தால் என்னால் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் பி .வா.சா.ஆ.15 ல் சாட்சிகளில் 2 வதாக உள்ள கையொப்பம் என் அப்பாவின் கையொப்பம் தான் . அந்த ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் 2 வதாக உள்ள சஞ்சீவிநாயக்கர் என்ற கையொப்பம் என் அப்பாவின் கையொப்பம் தான் . நான் என்னுடைய ஆதார் அட்டையை தாக்கல் செய்கிறேன் . அசலுடன் ஒப்பிடப்பட்ட ஆதார் அட்டை நகல் **பி.வா.சா.ஆ.27.**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு . தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

அமர்வு நீதிபதி(மு.பொ)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.